# கிறிஸ்தவம்

# தரம்

# 1

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாடநூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கு
www.edupub.gov.lk வலைத்தளத்தை நாடுங்கள்.

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | - | 2015 |
| இரண்டாம் பதிப்பு | - | 2016 |
| மூன்றாம் பதிப்பு | - | 2017 |
| நான்காம் பதிப்பு | - | 2018 |
| ஐந்தாம் பதிப்பு | - | 2019 |
| ஆறாம் பதிப்பு | - | 2020 |

முழுப் பதிப்புரிமையுடையது.

ISBN 978-955-25-0027-5

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக,
இல. 90, வசனவத்தா, மத்தேகோடா
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிப்பட்டு வெளியிடப்பட்டது.

Published by : Educational Publications Department
Printed by : Vishwa Graphics (Pvt) Ltd.

# தேசிய கீதம்

*சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நல்லெழில் பொலி சீரணி*
*நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா*
*ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்*
*நறுஞ்சோலை கொள் லங்கா*
*நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்*
*நமதுதி ஏல் தாயே*
*நம தலை நினதடி மேல் வைத்தோமே*
*நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதாரருள் ஆனாய்*
*நவை தவிர் உணர்வானாய்*
*நமதேர் வலியானாய்*
*நவில் சுதந்திரம் ஆனாய்*
*நமதிளமையை நாட்டே*
*நகு மடி தனையோட்டே*
*அமைவுறும் அறிவுடனே*
*அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

*நமதார் ஒளி வளமே*
*நறிய மலர் என நிலவும் தாயே*
*யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த*
*எழில்கொள் சேய்கள் எனவே*
*இயலுறு பிளவுகள் தமை அறவே*
*இழிவென நீக்கிடுவோம்*
*ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி*
*நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா*
*நமோ நமோ நமோ நமோ தாயே*

J ¸ uõ´ ©UPÒ |õ©õ÷Áõ®
J ß÷Ó |õ® Áõ Ê ® C À »®
| ß÷Ó E h¼À K k®
J ß÷Ó |® S ¸ v {Ó®

A uÚõÀ \÷Põuµº |õ©õ÷Áõ®
J ßÓõ´ Áõ Ê ® Á Í ¸ ® |õ®
| ßÓõ´ CÆ CÀ¼ Û ÷»
| »÷© Áõ Ì uÀ ÷Á s k©ß÷Óõ

¯õÁ ¸ ® A ß ¦ P ¸ ø n ² h ß
JØÖ ø© ] ÓUP Áõ Ì ¢v kuÀ
ö£õß Ý ®© o ²® • z x©À » & A x÷Á
¯õ ß Ö ©È ¯õa ö\ À Á©ß÷Óõ.

ஆனந்த சமரக்கோன்
PÂ øu ° ß ö£¯º¨ ¦.

# முன்னுரை

பூகோளக் கிராமத்திற்கு நாளந்தம் சேர்க்கப்படும் வளமான புதிய அறிவு நமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் உள்ளடக்கப்படுவது அவசியமானதாகும். அத்தோடு நமது நற்பண்புகளையும் அதனுடன் ஒன்றிணைக்க நாம் மறந்துவிடக்கூடாது. இந்நேர் மனப்பாங்குகளைப் பாதுகாப்பதுடன் மேலும் சிறந்த ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கும் மகத்தான பணிக்கு அவசியமான தரமான கற்றல் சாதனங்களை வழங்குவது எமது திணைக்களத்தின் பிரதான நோக்கம் என்பதை வலியுறுத்துகின்றேன்.

பாடவிடயத்திற்கு மேலதிகமாக பல உருக்களையும் மற்றும் சொற்களையும் கொண்டு ஆக்கப்பட்டுள்ள இப்பாடநூல்கள் எதிர்கால உலகத்திற்குச் செல்லும் பாதையின் ஒளிவிளக்குகள் போன்றனவாகும். நீங்கள் பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும்போது மகிழ்ச்சியுடன் நினைவுகூரக்கூடிய இனிமையான பல நினைவுகளை இப்பாடநூல்களின் பக்கங்கள் கொண்டிருக்கும் என்பது உறுதியாகும்.

ஆசிரியர்களிடம் இருந்து அறிவைப் பெற்றுள்ள உங்களுக்கு அறிவும் இரசனையும் நிறைந்த சிறந்த பரிசுப் பொருளான இப்பாடநூல்களின் சிறந்த பலன்களை அடைவதற்கான அறிவைத் தேடும் பயணத்தில் வீரநடை போடுவது அவசியமாகும். அரசாங்கம் பாடநூல்களுக்காகச் செலவிடுகின்ற பெருந்தொகைப் பணத்திற்கு விலைமதிப்பற்றதொரு பெறுமதியை மாணவர்களாகிய உங்களால் மட்டுமே வழங்க முடியும். வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக முகங்கொடுத்து நாளைய உலகை மலரச்செய்வதற்கு நாட்டின் சிறார்களான உங்களுக்கு இயலவேண்டுமென அன்புடன் பிரார்த்திக்கின்றேன்.

இப்பாடநூலாக்கத்திற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு அங்கத்தவர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பீ. என். அயிலப்பெரும**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல
2020.06.26.


| | | |
|---|---|---|
| **கண்காணிப்பும் மேற்பார்வையும்** | : | **பீ. என். அயிலப்பெரும**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **வழிகாட்டல்** | : | **டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**<br>கல்வி வெளியீட்டு ஆணையாளர்<br>உற்பத்தி - விநியோகப் பிரிவு<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **இணைப்பாக்கம்** | : | **சி. காண்டீபன்**<br>அபிவிருத்தி அலுவலர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.<br><br>**ஆர். டீ. விஜயவிக்ரம**<br>பிரதி கல்வி வெளியீட்டு ஆணையாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **ஆலோசனை** | : | **அருட்பணி டபிள்யூ. டீ. எபனேசர் ஜோசப்**<br>பொதுச் செயலாளர்<br>தேசிய கிறிஸ்தவ மன்றம். |
| **பதிப்பாசிரியர் குழு** | : | **அருட்பணி மிகிரி டீ. சில்வா சல்காது**<br>செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்<br>தேசிய கிறிஸ்தவ மன்றம்.<br><br>**எம். ரதீகா சமந்தி மென்டிஸ்**<br>ஆசிரியர்<br>தூய தோமையர் கல்லூரி<br>கல்கிசை. |
| **எழுத்தாளர் குழு** | : | **அருட்பணி சி. டப்ளிவ். சி பால்ராஜ்**<br>அதிபர் - தூய தோமா கல்லூரி<br>பண்டாரவளை.<br><br>**டீ. சிறோமாலா புஸ்பகுமாரி**<br>ஆசிரியர்<br>லக்தாச டி மெல் கல்லூரி<br>குருநாகல்.<br><br>**ஏ. கிதுமினி சல்காது**<br>ஆசிரியர்<br>நீர்/ கட்டுநாயக்கா ம.வி<br>கட்டுநாயக்க. |


| | | |
|---|---|---|
| **பதிப்பாசிரியர் (மொழி)** | : | **செல்வகனி மகாதேவன்**<br>ஆசிரியர்<br>கந்தேநுவர தமிழ் மகா வித்தியாலயம்<br>அல்வத்த, மாத்தளை. |
| **சரவை நோக்கு** | : | **இ. மகேந்திரன்**<br>நோவூட் த.ம.வி<br>நோவூட். |
| **நூல் வடிவமைப்பு** | : | **நடேஷன் துஷாந்தன்**<br>கணினி வடிவமைப்பாளர்<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம். |
| **சித்திரம் - அட்டைப்படம்** | : | **பீ. பிரசாத் நிஹாந்த பீரிஸ்**<br>ஆசிரியர் - தூய பேதுரு கல்லூரி<br>கொழும்பு. |

# பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| 1. | நாம் கடவுளின் படைப்பு | 2 |
| 2. | கடவுளின் கொடைகள் | 3 |
| 3. | கடவுளின் அழகிய கொடைகள் | 4 |
| 4. | எமது பெற்றோரை நேசிப்போம் | 5 |
| 5. | எமது சகோதர சகோதரிகளை நேசிப்போம் | 6 |
| 6. | எமது உறவினர்களும் நண்பர்களும் | 7 |
| 7. | எமது அன்பான ஆசிரியர்கள் | 8 |
| 8. | நான் நல்ல பிள்ளை | 9 |
| 9. | வான தூதரின் செய்தி | 10 |
| 10. | இயேசு பிறந்தார் | 11 |
| 11. | இயேசுவை வணங்குவோம் | 12 |
| 12. | புதுமைகளைச் செய்யும் இயேசு | 13 |
| 13. | நாம் மன்றாடுவோம் | 14 |
| 14. | தூய ஆவியானவர் | 15 |
| 15. | ஒற்றுமையாய் இருப்போம் | 16 |
| 16. | எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொடுப்போம் | 17 |
| 17. | அன்புடன் பாதுகாப்போம் | 18 |
| 18. | கடவுளைப் போற்றும் நல்ல பிள்ளைகள் | 19 |
| 19. | குணமளிக்கும் இயேசு | 20 |
| 20. | கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவோம் | 22 |
| | இணைப்புகள் | 23 - 35 |

சிலுவை





திருமறை



கிறிஸ்தவ தேவாலயம்

# 1 நாம் கடவுளின் படைப்பு



வாழ்வைப் பாதுகாப்போம்.
கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

# 2 கடவுளின் கொடைகள்



நிலம், வெயில், மழை
இவற்றைத் தந்த கடவுளுக்கு நன்றி.

# 3 கடவுளின் அழகிய கொடைகள்



இந்த அழகிய மரம், செடி, கொடிகளைத்
தந்த கடவுளுக்கு நன்றி கூறுவோம்.


குறிப்பு- இணைப்பு 1 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 24)

# 4 எமது பெற்றோரை நேசிப்போம்



கடவுள் தந்த பெற்றோரை நேசிப்போம்.
அன்பினால் அவர்களுக்கு உதவி செய்வோம்.

# 5 எமது சகோதர சகோதரிகளை நேசிப்போம்




அக்கா, அண்ணா, தம்பி, தங்கை எல்லோரும்
கடவுளுக்கு நன்றி சொல்லுவோம்.

# 6 எமது உறவினர்களும் நண்பர்களும்



உறவினர்களையும் நண்பர்களையும் தந்த கடவுளுக்கு நன்றி.

# 7 எமது அன்பான ஆசிரியர்கள்





அன்பான கடவுளே,
எமக்கு நீர் கொடுத்த அன்பான ஆசிரியர்களுக்காக
உமக்கு நன்றி.

ஆமென்

குறிப்பு- இணைப்பு 2 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 25)

# 8 நான் நல்ல பிள்ளை




நான் கடவுளின் பிள்ளை.

நான் நல்ல செயல்களையே தினமும் செய்திடுவேன்.

குறிப்பு- இணைப்பு 3 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 26)

# 9 வான தூதரின் செய்தி



அன்னை மரியா கடவுளின் குரலுக்குக் கீழ்ப்படிந்தார்.
நாமும் கடவுளின் குரலுக்குக் கீழ்ப்படிவோம்.

குறிப்பு- இணைப்பு 4 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 27)

# 10 இயேசு பிறந்தார்



பெத்தலகேமில் மாட்டுத் தொழுவம் ஒன்றில் நமது இயேசு பாலகன் துணிகளில் சுற்றிவைக்கப்பட்டார். வானத்தில் ஒளிர்ந்த நட்சத்திரங்கள் இயேசு பாலகனைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தன.

குறிப்பு- இணைப்பு 5 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 28)

# 11 இயேசுவை வணங்குவோம்



வானத்தில் தாரகை ஒன்று மின்னியது.
பெத்தலகேம் மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறந்தார். இரவு வேளையில் இடையர்கள் இயேசுவை வணங்கினார்கள்.
ஞானிகளும் பரிசில் கொடுத்து இயேசுவைத் தொழுதார்கள்.
நாமும் இயேசுவை வணங்குவோம்.

குறிப்பு- இணைப்பு 6 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 29)



# 12 புதுமைகளைச் செய்யும் இயேசு



ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் சிறுவன் அன்று இயேசுவின் கையில் கொடுத்தானே.
சந்தோசத்தோடு ஆசீர்வதித்து இயேசு அவற்றைப் பகிர்ந்தாரே. ஐயாயிரம் பேரின் பசியைப் போக்கினாரே.

குறிப்பு- இணைப்பு 7 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 30)


# 13 நாம் மன்றாடுவோம்



இயேசு எப்போதும் கடவுளுடன் உரையாடினார். சிறுவராகிய நாமும் எப்போதும் கடவுளிடம் மன்றாடுவோம்.


குறிப்பு- இணைப்பு 8 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 31)

# 14 தூய ஆவியானவர்




தூய ஆவியானவர் உலகில் இருக்கிறார்.
அவர் எனக்குள்ளும் இருக்கிறார்.

# 15 ஒற்றுமையாய் இருப்போம்




சண்டை சச்சரவுகள் இன்றி
அனைவரும் ஒன்றுபடுவோம்.
சிரித்து மகிழ்ந்திடுவோம்.
ஒற்றுமையின் பலம் காண்போம்.

# 16 எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொடுப்போம்



**விதுசா** : எனது வயலின் உடைந்துவிட்டது.

**ஆசிரியை** : அழ வேண்டாம் விதுசா, நாம் அதைத் திருத்தி எடுப்போம்.

**றோய்** : இதோ, எனது வயலின். அதைப் பயன்படுத்து.

**விதுசா** : உனக்கு மிகவும் நன்றி.

**ஆசிரியை** : றோய் மிகவும் நல்ல பிள்ளை. இவ்வாறு சமாரியர் ஒருவர் தன்னிடமுள்ளவற்றை விழுந்து கிடந்த ஒருவருடன் பகிர்ந்து கொண்டதை நாம் அறிந்திருக்கிறோம் அல்லவா!

குறிப்பு- இணைப்பு 9 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 32)

# 17 அன்புடன் பாதுகாப்போம்



பிரிவினை இன்றி அனைவருக்கும் பணி செய்வோம்.
நல்ல சமாரியனைப் பின்பற்றுவோம்.

குறிப்பு- இணைப்பு 10 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 33)

## 18 கடவுளைப் போற்றும் நல்ல பிள்ளைகள்



தாவீது சிறியவன். ஆனாலும் நல்ல மேய்ப்பன். தனது தந்தையின் ஆடுகளை பசும் புல் உள்ள இடத்திற்கு மேய்ச்சலுக்காக எடுத்துச் செல்வான். அவனுடைய கைகளில் ஒரு யாழையும் எடுத்துச் செல்வான்.

ஆடுகள் புல் மேயும்போது, தாவீது யாழ் இசைத்து கடவுளைப் போற்றுவான்.

சிறியவர்களாகிய நாமும் பாடலோடும், இசையோடும், கடவுளைப் போற்றுவோம்.

# 19 குணமளிக்கும் இயேசு



கலிலேயாவில் கானா என்னும் இடத்தில் அரசுக்குப் பணியாற்றும் அதிகாரி ஒருவர் இருந்தார். ஒருநாள் அவருடைய மகன் நோயுற்றார்.

இயேசு நோயுற்றோரைக் குணப்படுத்துவார் என்பதை அந்த அதிகாரி அறிந்திருந்தார்.

‘‘போதகரே, எனது மகன் மரணத்தருவாயில் இருக்கிறான். அவனைக் குணப்படுத்த உம்மால் கூடும்’’ என்று அந்த அதிகாரி இயேசுவிடம் கூறினார்.

‘‘போ, உனது மகன் உயிருடன் இருக்கிறான்’’ என்று

இயேசு கூறினார். அந்த அதிகாரி இயேசு கூறியதை நம்பினார். அவருடைய மகன் குணமடைந்தார்.

நாம் நம்பிக்கையோடு எப்போதும் கடவுளிடம் மன்றாடுவோம்.

குறிப்பு- இணைப்பு 11 பாடத்திற்கான செயற்பாடு. (பக்கம் 34)

20

# கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்




இயேசு எனக்காக சிலுவையில் மரித்தார்.



அவர் மரணத்தை வென்று உயிரோடு எழுந்தார். அல்லேலூயா; அவரைப் போற்றுவோம்.


இ
ணை
ப்
பு
க
ள்




# இணைப்பு - 1



மேலே உள்ள படத்தில் பழம், இலை,
பூக்கள் என்பவற்றை வரைந்து
அழகாக முழுமைப்படுத்துங்கள்.



# இணைப்பு - 2




1. மஞ்சள் நிறம்
2. சிவப்புநிறம்
3. செம்மஞ்சள் நிறம்
4. றோஸ் நிறம்
5. தண்டு - கபிலநிறம்
6. றிபன்நாடா-ஊதாநிறம்
7. இலை - பச்சை நிறம்

இலக்கத்துக்கு ஏற்ற நிறங்களைக் கொண்டு
இப் பூக்களை நிறந்தீட்டுங்கள்.



# இணைப்பு - 3

உங்கள் படத்தை
இங்கு
ஒட்டுங்கள்.

1. காலையில் எழுந்திருத்தல்.
2. செபம் செய்தல்.
3. பகிர்ந்து கொள்ளல்.
4. உதவி செய்தல்.
5. நல்ல வார்த்தைகளைப் பேசுதல்.
6. மிருகங்களை அன்புசெய்தல்.
7. பாடசாலைக்கு தினமும் ஒழுங்காக வருதல்.

நீங்கள் செய்யும் நல்ல செயல்களுக்கு
எதிரே நட்சத்திரங்களை ஒட்டுங்கள்.



## இணைப்பு - 4

# இ

# யே

# சு

மேலே தரப்பட்டுள்ள ‘‘இயேசு’’ என்னும்
சொல்லை
மூன்று நிறங்களில் நிறந்தீட்டுங்கள்.




# இணைப்பு - 5

| | |
|---|---|
| 1 | 2 |
| 3 | 4 |

35ம் பக்கத்திலுள்ள உள்ள படத்தை
வெட்டி,
இலக்க ஒழுங்கில் ஒட்டுங்கள்.
என்ன படத்தை முழுமையாகக்
காண்கிறீர்கள் என்று கூறுங்கள்.


# இணைப்பு - 6



மாட்டுத்தொழுவத்திற்கு ஞானிகள்
செல்லக்கூடிய வழியை சிவப்பு நிறத்திலும்,
இடையர்கள் தொழுவத்திற்கு செல்லக்கூடிய
வழியை நீல நிறத்திலும்
நிறந்தீட்டுங்கள்.)

# இணைப்பு - 7


ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் நிறக் கடதாசியில் வரைந்து, வெட்டி கூடையினுள் ஒட்டுங்கள்.





# இணைப்பு - 8

செபம் செய்யும் நேரத்தை சரியாக இணையுங்கள்.





# இணைப்பு - 9

உங்களிடம் உள்ளவற்றைப் பிறருடன் பகிர்ந்துகொண்ட சம்பவத்தை சித்திரமாகத் தீட்டுங்கள்.



## இணைப்பு - 10

நிறப்பென்சில்கள் கொண்டு
புள்ளிக் கோடுகள் மீது எழுதுங்கள்.

நான்

நல்ல

சமாரியன்

ஆவேன்

# இணைப்பு - 11

சித்திரத்தை நிறந்தீட்டுங்கள்.

